## 52. கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியானேன்

**பல்லவி**

கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியானேன்
பழையவைகள் எல்லாம் புதிதாயின

**அனுபல்லவி**

*வாழ்வது நான் அல்ல*
*இயேசுவே என்னில் வாழ்கின்றார்*

**சரணங்கள்**

1. பழைய மனிதன் சிலுவையிலே
அறையப்பட்டு புதைக்கப்பட்டான்
புதிய மனிதன் உயிர்த்தெழுந்ததில்
உயிர்பெற்று எழுப்பப்பட்டான்
- வாழ்வது நான்

2. பழைய மனிதனை களைத்து விட்டேன்
அவனின் கிரியைகளை ஒழித்து விட்டேன்
புதிய மனிதனை தரித்து கொண்டேன்
இரட்சிப்பின் சந்தோஷமே
- வாழ்வது நான்

3. பாவத்திற்கு மரித்து விட்டேன்
நீதிக்கென்று உயிர் பெற்றேன்
மாம்சத்திற்கு மரித்து விட்டேன்
ஆவியிலே உயிர் பெற்றுவிட்டேன்
- வாழ்வது நான்